<u>**சார்பு நீதிமன்றம், அவிநாசி**</u>

<u>**OS – 390/2016**</u>

நாள் 09.03.2026

DW 2 – சுப்பிரமணியம்

த/பெ – பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் அ.வ.எண். 19/2004 வழக்கில் அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் வா.சா.ஆ.3 உத்தரவான 07.11.1966 ம் தேதியிட்ட கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் தாவா சொத்தை பொறுத்து பிறப்பித்த உத்தரவை ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த உத்தரவு எனக்கு தெரியாது. அந்த அ.வ.எண்.19/2004 ன் வழக்குரை பி.வா.சா.ஆ.6 ல் கண்ட வழக்கின் பிரதிவாதிகள் இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா பெற்றதாக சொல்லியுள்ளோம் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. சொத்தை பொறுத்து ஏற்கனவே வா.சா.ஆ.3 உத்தரவு ஏற்பட்டுள்ளது தெரிந்திருந்தும் அதை மறைத்து தீர்ப்பு பெறவேண்டும் என்பதற்காகத்தான் அந்த உத்தரவை அந்த வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. அந்த வழக்கில் 1918 ம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட வில்லங்க சான்று எதுவும் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த வில்லங்க சான்றை தாக்கல் செய்தால் நாங்கள் சொல்லும் கோவிலுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதற்காகத்தான் வில்லங்க சான்றை நாங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் கண்ட சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் கணக்கு போன்ற வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் நாங்கள் சொல்லும் கோவிலின் பெயர் வருவாய் ஆவணங்களில் வரவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் நாங்கள் சொல்லும் கோவில் சுவாதீன அனுபவத்தில் இல்லாததால்தான் வருவாய் ஆவணங்களில் கோவில் பெயர் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கில் வாதியை அந்த அ.வ.எண்.19/2004 வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர் அப்போது எந்த பிரச்சனைக்கும் வரவில்லை. அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதி தரப்பினராக சேர்க்கப்படாத நிலையில் அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வா.சா.ஆ.1ன் மூலம் கிரையம் பெற்ற நபர்கள் 21.01.1919ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் வா.சா.ஆ.2 மூலம் உரிய மற்றும் தகுந்த மறுபயனுக்கு நஞ்சபண்டாரம் என்பவரின் மகன் காளிபண்டாரத்திற்கு கிரையம் எழுதிக்கொடுத்து சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த முன்வழக்கில் 21.01.1919ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் வா.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என்று ஆவணத்திற்கு எதிராக பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சொத்து கோவில் பெயரில் ஏற்கனவே இருந்ததால் வா.சா.ஆ.2 ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை. அந்த வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை ரத்து செய்யவேண்டி பரிகாரம் எதுவும் கோராத நிலையில் அந்த அ.வ.எண்.19/2004 வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. நாங்கள் சொல்லும் விநாயகர், மாரியம்மன் கோவில் பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் தான செட்டில்மெண்ட் அமலுக்கே வரவில்லை என்றும், அந்த ஆவணம் இல்லா நிலையது என்று சொன்னால் சரியல்ல.

அதனால் அந்த செல்லாத ஆவணத்தின் பெயரில் தாவா சொத்தில் கோவில் பெயரில் நாங்கள் எந்தவித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 உத்தரவின் மேல் எந்தவிதமான மேல்முறையீடும் கோவில் தரப்பில் போகவில்லை என்றால் சரியல்ல, அந்த உத்தரவு பற்றிய விவரமே எங்களுக்கு தெரியவரவில்லை. நாங்கள் சொல்வதுபோல தாவா சொத்தில் நாங்கள் சொல்லும் கோவில் எந்த காலத்திலும் சுவாதீன அனுபவத்தில் இருந்து அனுபவித்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தில் எங்களுக்கோ நாங்கள் சொல்லும் கோவிலுக்கோ எவ்வித பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதி தாவாவில் சொல்லியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:41:52 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**